தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 15.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1974/A/2024**

திரு.ம.மனோகுமார் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
வட்டாரக் கல்வி அலுவலகம்,
சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (15.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.ம.மனோகுமார் அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு.சி.பெருமாள்<br>பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர், வட்டாரக் கல்வி அலுவலகம், சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 09.01.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், சோளிங்கர் வட்டாரக் கல்வி அலுவலர்-2 திரு.K.V.பாபு அவர்கள் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி நிர்வாகிகள் மீது சோளிங்கர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் தனிநபர் புகார் மனு அளித்து அந்த புகார் மீது விசாரணை செய்ய வேண்டி ஆஜரான நாட்களைக் குறிப்பிட்டு அந்நாட்களில் அவர் எவ்வகையான விடுப்பு எடுத்திருந்தார் என்ற தகவல் உட்பட அது தொடர்பான தகவல்களை 11 இனங்களில் தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யப்பட்ட நாள் | 12.01.2024 |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 16.02.2024 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | ----- |

| | |
|---|---|
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 18(1) -ன் கீழான புகார் மனு நாள் | 04.04.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திரு.சி.பெருமாள், கண்காணிப்பாளர், வட்டாரக் கல்வி அலுவலகம், சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 06.03.2024 அன்று ரூ42/- செலுத்தி தகவல்களை பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தான் குறிப்பிட்டுக்கோரிய நாட்களில் வட்டாரக் கல்வி அலுவலர் அவர்கள் அலுவலகத்திற்கு வந்திருந்ததாகவும், ஆனால் அவர் தற்செயல் விடுப்பு எடுத்திருந்ததாகத் தெரிவித்ததாகவும் தெரிவித்தார். எனவே, சரியான தகவல்களை தனக்கு பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கோரினார்.

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான மற்றும் உண்மையான தகவல்கள் அளிக்கப்படவில்லை என ஆணையம் கருதுகிறது. எனவே பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து பின்வருமாறு உத்தரவிடுகின்றது :-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களை வழங்கும் நோக்கத்தில் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), இராணிப்பேட்டை அவர்கள் தகவல்பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 18(3)(b)இன் கீழ் நேரில் ஆய்வு செய்து, 1. அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்கள் 2. அப்போதைய மற்றும் தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர்கள் ஆகியோரை நேரில் அழைத்து உரிய விசாரணை மேற்கொண்டு, உரிய ஆவண நகல்களுடன் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி) அவர்களின் விசாரணை அறிக்கையின் நகல், ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகின்றது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1974/A/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ கண்காணிப்பாளர்,
வட்டாரக் கல்வி அலுவலகம்,
சோளிங்கர்,
இராணிப்பேட்டை மாவட்டம் - 631 102.

**<u>மனுதாரர்</u>**

திரு. ம. மனோகுமார்
41/2, அண்ணா நகர் 5-வது தெரு,
BDO அலுவலகம் பின்புறம்,
சோளிங்கர்,.
ராணிப்பேட்டை - 631 102.

Copy to file

KRM/PA 16.07.2026